மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்
கோயம்புத்தூர்

ந.க.எண்:7185/2020/பே.மே. நாள்: .07. 2021

**பத்திரிக்கைச் செய்தி**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுபரவுதலை தடுக்க தமிழகஅரசின் உத்திரவு மற்றும் வழிகாட்டுதலின் படி பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தற்பொழுது கொரோனா வைரஸ் தொற்று பரவுதல் மிகவும் குறைந்த அளவில் உள்ளது. இந்நிலையில் கேரள மாநிலத்தில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் தமிழக அரசால் கேரள மாநிலத்திலிருந்து கோயம்புத்தூர் மாவட்டத்திற்குள் வருபவர்களும் கோயம்புத்தூரிலிருந்து கேரளமாநிலம் சென்று திரும்புபவர்களும் https://eregister.tnega.org என்ற இணையதளத்தில் இ-பதிவு செய்து இ-பாஸ் கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்திலிருந்து வருபவர்களை கண்காணிக்க வால்பாறை வட்டத்தில் அமைந்துள்ள வால்பாறை, ஆனைமலை வட்டத்தில் அமைந்துள்ள மீனாட்சிபுரம், கோவிந்தாபுரம், மதுக்கரை வட்டத்தில் அமைந்துள்ள வாளையார், கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் அமைந்துள்ள ஆனைகட்டி, பொள்ளாச்சி வட்டத்தில் அமைந்துள்ள கோபாலபுரம், நடுபுனி, கிணத்துக்கடவு வட்டத்தில் அமைந்துள்ள வீரப்பக்கவுண்டன்புதூர் மற்றும் கோபநாரி ஆகிய மாநில எல்லை சோதனைச் சாவடிகளில் வருவாய் துறை, காவல் துறை, உள்ளாட்சித்துறை மற்றும் மருத்துவப்பணியாளர்கள் அடங்கிய குழுக்கள் மூலம் கண்காணிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. எனவே, கேரள மாநிலத்திலிருந்து வருபவர்கள் முழுமையான சோதனைக்கு

உட்படுத்தப்பட்டு இ-பாஸ் இருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். இ-பாஸ் இல்லையெனில் மாவட்டத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அதே போன்று தமிழகத்திற்குள் பல பகுதிகளில் இருந்து கேரளமாநிலத்திற்கு தொழில், வேலைவாய்ப்பு மற்றும் சொந்த காரணங்களுக்காக செல்பவர்களும், திரும்ப கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வரும்பொழுது இ-பாஸ் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தனிநபர், இரு சக்கர வாகனம், மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் வரும் ஓட்டுநர் உட்பட அனைவருக்கும் இந்த நிபந்தனை பொருந்தும்.

கேரள மாநிலத்திலிருந்து கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வந்தபின்பு கொரோனா அறிகுறிகள் ஏதேனும் இருப்பின் மாவட்ட கட்டுப்பாட்டு மையத்திற்கு(1077) தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கோயம்புத்தூர்

பெறுநர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர்.

நகல்:
1) காவல் கண்காணிப்பாளர்,
   கோயம்புத்தூர் மாவட்டம்.
2) சார் ஆட்சியர், பொள்ளாச்சி.
3) வருவாய் கோட்டாட்சியர்,
   கோயம்புத்தூர் வடக்கு/தெற்கு.